09.05.2016

தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### விருதுநகர் பகுதியில் விவசாயம் பொய்த்துப்போனதால் விறகுக்கரி உற்பத்தியில் இறங்கிய விவசாயத் தொழிலாளர்கள்

விருதுநகர் மாவட்டம் நரிக்குடி பகுதியில் விவசாயம் பொய்த்ததால், விறகுக் கரி உற்பத்தி செய்யும் பணியில் தொழிலாளர்கள் பலரும் இறங்கியுள்ளனர்.

விருதுநகர் மாவட்டம் நரிக்குடி ஒன்றியப் பகுதியில் 100-க்கும் மேற்பட்ட கிராமங்கள் உள்ளன. இப்பகுதி வானம் பார்த்த பூமி என்பதால் பருத்தி, மிளகாய், கடலை போன்ற பயிர்கள் மட்டுமே விவசாயம் செய்யப்படுகின்றன. கடந்த ஆண்டு தொடர் மழை பெய்ததால், இந்த வகை பயிர்கள் வாடி விட்டன. ஏற்கனவே இப்பகுதிகளில் விவசாயம் பொய்த்ததால் பலர், கோவை, திருப்பூர், சென்னை போன்ற நகரங்களில் ஆயத்த ஆடை நிறுவனங்களிலும் மற்றும் கட்டட பணிகளிலும் ஈடுபட்டு வருகின்றனர். மேலும், சிலர் வேறு வேலை தேடி மதுரை போன்ற நகரங்களுக்கு இடம் பெயர்ந்து விட்டனர். இதன் காரணமாக இப்பகுதி விவசாய நிலங்கள் தற்போது கருவேல மரங்களின் கூடாரமாக மாறி விட்டன. இந்நிலையில் இருஞ்சிறை, அ.முக்குளம், கட்டனூர் பகுதியில் வாழும் சிலர், கருவேல மரங்களை சிறு சிறு துண்டுகளாக வெட்டி, அதை ஒன்றன் மேல் ஒன்றாக அடுக்கிவைத்து கரி மூட்டம் போடுகின்றனர். இதிலிருந்து ஹோட்டல்களில் எரிக்க பயன்படுத்தும் விறகுக்கரி உற்பத்தி செய்யப்படுகிறது. தற்போது கோடை வெப்பம் அதிகரித்துள்ள நிலையில் பகல் நேரங்களில் யாரும் வெளியில் செல்ல வேண்டாம் என மாவட்ட நிர்வாகம் சார்பில் அறிவிக்கப்பட்டுள்ளது. ஆனால், கட்டனூர் பகுதியில் வாழும் மக்கள் அன்றாட வாழ்வாதாரத்திற்காக தினம் தினம் கடும் வெப்பத்தையும் பொருள்படுத்தாமல் நெருப்பு வைக்கப்பட்ட மூட்டத்தின் மீது ஏறி நின்று தண்ணீர் ஊற்றும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

இது குறித்து கட்டனூரை சேர்ந்த வீரபத்திரன் கூறியது: நரிக்குடி பகுதியில் பல கிராமங்களை சேர்ந்த விவசாயிகள் விவசாயம் பொய்த்ததால் வெளியூர்களுக்கு வேலை தேடி சென்று விட்டனர். அதனால், பல வீடுகளில் பெண்கள் மற்றும் வயதானவர்கள் மட்டுமே உள்ளனர். இப்பகுதிகளில் கருவேல மரங்கள் அதிகம் வளர்ந்துள்ளன. எங்களுடைய வாழ்வாதாரத்தை மேம்படுத்த, இந்த மரங்களை வெட்டி மூட்டம் போடும் பணியில் பலர் ஈடுபட்டு வருகிறோம். தீ வைக்கப்பட்ட மூட்டத்தில் பள்ளம் (ஓட்டை) விழுந்து விட்டால் விறகு முழுவதும் எரிந்து விடும். அதனால், இரவு, பகலாக மூட்டத்தின் அருகிலேயே இருந்து கண்காணித்து வருவோம். மேலும், எந்த பகுதியில் தீ வெளியில் எரிய தொடங்குகிறதோ, அப்பகுதியில் மண்ணால் மூடி தண்ணீர் ஊற்றுவோம். மேலும், மூட்டத்திற்கான தண்ணீர் கிடைக்காததால் டிராக்டர் தண்ணீரை விலைக்கு வாங்கி பயன்படுத்துகிறோம். ஒரு டன் விறகு மூட்டம் போட்டால் சுமார் 15 மூடை கரி கிடைக்கும். ஆனால், உழைப்புக்கு ஏற்ற பலன் கிடைக்கவில்லை என்றார்.

## தாராபுரத்தில் பலத்த மழை

திருப்பூர் மாவட்டத்தில் தாராபுரத்தில் வெள்ளிக்கிழமை இரவு 48 மி.மீ. மழை பெய்தது.

திருப்பூர் மாவட்டத்துக்கு உள்பட்ட பகுதிகளில் கோடை காரணமாக அண்மைக்காலமாக வெப்பம் அதிகரித்து காணப்படுகிறது. இந்நிலையில், கடந்த இரு நாள்களில் திருப்பூர் மாநகர் மற்றும் புறநகரின் பல்வேறு பகுதிகளில் மேகம் மூட்டத்துடன் காணப்பட்டது. ஆனால், மழை பெய்யவில்லை. இந்நிலையில், திருப்பூர் மாவட்டத்தின் புறநகரின் பல்வேறு பகுதிகளில் வெள்ளிக்கிழமை இரவு மழை பெய்தது.

மழை அளவு (மி.மீட்டரில்): உடுமலை 11, பல்லடம் 1, தாராபுரம் 48, மூலனூர் 40.

## தருமபுரியில் கோடை மழை

தருமபுரி மாவட்டத்தில் ஏப்ரல் தொடக்கத்திலிருந்தே வெயிலின் தாக்கம் அதிகரித்து, 106 டிகிரி பாரன்ஹீட் வரை சென்று கொண்டிருந்த

நிலையில், இரண்டாவது முறையாக ஞாயிற்றுக்கிழமை மாலையும் தருமபுரியில் பெய்த மழை நிலத்தைக் குளிர்வித்திருக்கிறது.

தருமபுரி மாவட்டத்தில் ஏப்ரல் தொடக்கமே வெயில் 100 டிகிரி பாரன்ஹீட்டாகத் தொடங்கியது. தொடர்ந்து குறையாமல் வெளுத்து வாங்கிய வெயில், ஒரு கட்டத்தில் சதத்தைத் தாண்டி 106 டிகிரி பாரன்ஹீட் வரையிலும் சென்றது.

பொதுமக்கள் கடும் அவதிக்குள்ளாகி வந்த நிலையில் வெள்ளிக்கிழமை மாலை பெய்த மழை தருமபுரி மக்களை மகிழ்ச்சிக்குள்ளாக்கியது. அப்போது தருமபுரியில் 33 மிமீ மழையும், அரூரில் 32 மிமீ மழையும் பதிவாகின. ஆட்சியரக வளாகத்திலுள்ள மழைமானியில் 46 மிமீ பதிவானது.

இந்த நிலையில் சனிக்கிழமை ஒகேனக்கல் பகுதியில் மட்டும் 1.60 மிமீ மழை பெய்தது. மற்ற பகுதிகளில் மழை இல்லை. இந்தக் கோடை மழையின் தொடர்ச்சியாக ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணிக்கு மேல் தருமபுரி நகரில் பெரிய துளிகளாக விழுந்த மழை சுமார் அரை மணி நேரத்துக்கும் மேலாகப் பெய்தது.

இதனால், சேலம் பிரதான சாலையில் மருத்துவக் கல்லூரியை அடுத்து சாலைகளில் மழைநீர் பெருக்கெடுத்து ஓடியது. மற்ற பகுதிகளிலும் சாலைகளில் தண்ணீர் நிரம்பிக் காணப்பட்டது.

நகருக்குள் இரண்டாவதாக பெய்த கோடை மழையால் தருமபுரி நகரில் வெப்பநிலை இயல்புநிலைக்குத் திரும்பத் தொடங்கியுள்ளது. சனிக்கிழமை 97.1 டிகிரியும், ஞாயிற்றுக்கிழமை பகலில் 98 டிகிரியும் வெயில் அளவு பதிவாகின.

## பரமத்தி வேலூர் பகுதியில் பலத்த காற்றுடன் கன மழை: ரூ.10 லட்சம் மதிப்புள்ள வாழைகள் சேதம்

பரமத்தி வேலூர் சுற்றுப் பகுதிகளில் வெள்ளிக்கிழமை இரவு பலத்த காற்றுடன் பெய்த கன மழையால் ரூ.10 லட்சம் மதிப்புள்ள வாழைகள் சரிந்து விழுந்து சேதமடைந்தன.

கடந்த 2 மாதங்களாக பரமத்திவேலூர் சுற்றுப் பகுதிகளில் கடும் வெயில் அடித்து வந்தது. இதனால், பொதுமக்கள் பெரும் அவதியுற்றனர். இந்த நிலையில், வெள்ளிக்கிழமை இரவு பரமத்தி வேலூர் சுற்றுப் பகுதிகளில் திடீரென பலத்த காற்று வீசியது. தொடர்ந்து, சிறிது நேரத்தில் கனமழை பெய்யத் தொடங்கியது. சுமார் ஒரு மணி நேரம் இடைவிடாது கனமழை பெய்தது.

இதனால், பரமத்தி வேலூர் சுற்றுப் பகுதிகளான பொத்தனூர், வேலூர், நன்செய் இடையாறு, அனிச்சம்பாளையம் உள்ளிட்ட பகுதிகளில் பல்லாயிரக்கணக்கான ஏக்கரில் சாகுபடி செய்யப்பட்டிருந்த வாழை மரங்கள் சரிந்து விழுந்தன.

இதனால், சுமார் ரூ.10 லட்சம் வரை சேதம் ஏற்பட்டுள்ளதாகவும், இதற்கு உரிய இழப்பீடு வழங்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

### மாற்றுப்பயிர் திட்டம் கொண்டு வர வலியுறுத்தல்

டெல்டா பகுதியில் மாற்றுப்பயிர் திட்டம் கொண்டு வரவேண்டும் என காவிரி நீர்ப்பாசன விவசாயிகள் நலச்சங்கம் வலியுறுத்தியுள்ளது. நெல், கரும்பு, வாழைக்கு அதிக நீர் தேவைப்படுகிறது. வட கிழக்கு பருவமழை காலங்களில் நீரைச் சேமிக்க முடியாமல் தவிக்கிறோம். மேட்டூர் முதல் பூம்புகார் வரை பெய்யும் மழைநீரின் அளவு 220 டிஎம்சியாக இருக்கிறது. நீர்ப்பாசனத் திட்டம் வேண்டும். குறைந்த நீரில் விவசாயிகளுக்கு லாபம் தரும் மாற்றுப்பயிர் திட்டத்தை அரசு அளிக்க வேண்டும் என அதன் தலைவர் மகாதானபுரம் வி.ராஜாராம் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### மாவட்டத்தில் பரவலாக மழை: அரவக்குறிச்சியில் 107 மி.மீ மழை பதிவு

கரூர் மாவட்டத்தில் வெள்ளிக்கிழமை இரவு பரவலாக மழை பெய்தது. அதிகபட்சமாக அரவக்குறிச்சியில் 107 மி.மீ.மழை அளவு பதிவானது.

தமிழகத்தில் கோடைகாலம் கடந்த பிப்ரவரி மாதம் முதலே ஆரம்பமான நிலையில்,நாள்தோறும் சூரியனின் கதிர்வீச்சு தொடர்ந்து அதிகரித்து வந்தது. இந்நிலையில்,தமிழகத்திலே அதிகபட்சமாக கரூர் மாவட்டம்,க. பரமத்தியில் வெள்ளிக்கிழமை 109 டிகிரி வெப்பம் பதிவானது.

இதையடுத்து,அவ்வப்போது வானிலை ஆய்வு மையம் பகல் 12 மணி முதல் 3 மணி வரை பொதுமக்கள் வெளியே செல்வதைக் தவிர்க்குமாறு அறிவுறுத்தி வந்தது. மேலும், இளநீர், மோர், நுங்கு சாப்பிடுங்கள் என அறிவுறுத்தியும் வந்தது.

இந்நிலையில் கடந்த 4 ஆம் தேதி அக்னி நட்சத்திரம் எனும் கத்திரி வெயில் ஆரம்பமானது. இதனால் சூரியக்கதிர் வீச்சு மேலும் அதிகரித்து பொதுமக்களை வாட்டி வதைத்தது. இதையடுத்து, வெள்ளிக்கிழமை காலை முதலே மேகம் திரண்டு மழை பெய்யும் அறிகுறி வானில் தென்பட்டது. இரவு சுமார் 9 மணியளவில் திடீரென குளிர்காற்று வீசியது. தொடர்ந்து,இடி,மின்னலுடன் மழை பெய்தது. இரவு 11 மணி வரை பலத்த மழை பெய்ததால் பூமி குளிர்ந்தது. இதனால் பொதுமக்கள் பெரு மகிழ்ச்சியடைந்தனர். மாவட்டத்தில் அதிகபட்சமாக அரவக்குறிச்சியில் 107மி.மீ.,குறைந்த பட்சமாக குளித்தலையில் 18.20 மி.மீ மழை அளவு பதிவானது.

மாவட்டத்தில் வெள்ளிக்கிழமை இரவு முதல் சனிக்கிழமை காலை வரை பதிவான மழை விவரம்(மி.மீட்டரில்): அரவக்குறிச்சி-107, க. பரமத்தி - 46, குளித்தலை - 18.20, மாயனூர் - 26, கரூர் -19.20,அணைப்பாளையம் - 29,தோகைமலை - 52,பஞ்சபுùபட்டி - 64.20,பாலவிடுதி - 55.20,கடவூர் - 21.20,கிருஷ்ணராயபுரம் - 46.30,மைலம்பட்டி - 45.20. மாவட்டத்தில் மொத்தம் - 529.50 மி.மீ. மழை பெய்துள்ளது.

## இன்றைய வேளாண் செய்திகள்

### தமிழகத்தில் மழை நீடிக்கும்

சென்னை: 'தமிழகம் முழுவதும் பரவலாக மழை நீடிக்கும்' என, சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

வானிலை ஆய்வு மைய அறிக்கை விவரம்: வெப்ப சலனம் காரணமாக, இன்றும், நாளையும், தமிழகம் முழுவதும், லேசானது முதல் மிதமான மழை பெய்ய வாய்ப்பு உள்ளது. நேற்று காலை, 8:30 மணி வரை, கிருஷ்ணகிரி மாவட்டம் தளியில் - 10 செ.மீ., மழை பெய்துள்ளது. கரூர், நெல்லை, வேலுார், சிவகங்கை, திருச்சி ஆகிய மாவட்டங்களில், 3 செ.மீ., மழை பதிவாகியுள்ளது. தமிழகத்தில், நேற்று மிக அதிகபட்சமாக, திருவள்ளூர் மாவட்டம், திருத்தணியில், 41 டிகிரி, 'செல்சியஸ்' வெப்பம் பதிவானது.இவ்வாறு, அறிக்கையில் கூறப்பட்டு உள்ளது.

### தக்காளி, வெங்காயம் விலை உயர்வு வெயிலால் விளைச்சலும் பாதிப்பு

ஆண்டிபட்டி: ஆண்டிபட்டியில் வெயில் தாக்கம் காரணமாக விளைச்சல் பாதித்து வரத்து குறைந்ததால் தக்காளி, வெங்காயம் விலை உயர்ந்து வருகிறது.

ஆண்டிபட்டி பகுதியில் பாலக்கோம்பை, அழகாபுரி, ராமகிருஷ்ணாபுரம், கொழிஞ்சிபட்டி, தெப்பம்பட்டி, சேவாநிலையம், சித்தார்பட்டி, ராஜதானி, கணேசபுரம், சொக்கத்தேவன்பட்டி, ஏத்தக்கோயில், சித்தயகவுண்டன்பட்டி புள்ளிமான்கோம்பை உட்பட பல கிராமங்களில் தக்காளி, வெங்காயம் சாகுபடி செய்கின்றனர்.

இப்பகுதியில் விளையும் இவை மதுரை, ஆண்டிபட்டி காய்கறி மார்க்கெட் கொண்டு செல்லப்பட்டு, பின் அங்கிருந்து தமிழகத்தின் பல பகுதிகளுக்கும், வெளிமாநிலங்களுக்கும் அனுப்பப்படும்.

விலை உயர்வு

கடந்த சில மாதங்களுக்கு முன் ஏற்பட்ட விலை உயர்வால், இப்பகுதி விவசாயிகள் பலரும் தக்காளி, வெங்காய சாகுபடியில் அதிக நாட்டம் செலுத்தினர்.

விளைச்சல் அதிகரித்து சில வாரங்களுக்கு முன் விலை குறைந்தது. தற்போது ஆண்டிபட்டி பகுதியில் வெயிலின் தாக்கம் அதிகரித்து தக்காளி, வெங்காய சாகுபடியை பாதித்துள்ளது. இதனால் நிலத்தடி நீர் மட்டம் குறைந்ததால் இறவை பாசன நிலங்களில் சாகுபடி செய்யப்பட்டுள்ள தக்காளி, வெங்காய பயிர்கள் வாடுகின்றன. விளைச்சலும் கணிசமாக குறைந்துள்ளது.

விவசாயிகள் கூறுகையில், “ ஆண்டிபட்டி பகுதியில் ஒரு மாதத்திற்கு முன் 10 டன்னாக இருந்த தக்காளி வரத்து படிப்படியாக குறைந்து தற்போது 5 டன் ஆகிவிட்டது. இதேபோல் வெங்காய வரத்தும் கணிசமாக குறைந்து விட்டது. சில வாரங்ளுக்கு முன் 15 கிலோ கொண்ட தக்காளி பெட்டி ரூ. 100க்கும் குறைவாகவே இருந்தது. தற்போது 15 கிலோ கொண்ட பெட்டி ரூ. 300 வரை உள்ளது. இதேபோல் 10 கிலோ கொண்ட வெங்காய சிப்பம் ரூபாய் 150க்கும் குறைவாகவே இருந்தது. தற்போது 10 கிலோ வெங்காய சிப்பம் ரூ. 300 வரை உயர்ந்து விட்டது.

விலை உயர்ந்தாலும் விளைச்சலில் ஏற்பட்ட பாதிப்பு விவசாயிகளுக்கு பாதகமாக அமைந்துள்ளது.

## இன்றைய வேளாண் செய்திகள்

### கிருஷ்ணகிரி மாவட்டத்தில் இடி- மின்னலுடன் திடீர் மழை

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் இடி - மின்னலுடன் திடீரென மழை பெய்தது.

100 டிகிரியை தாண்டிய வெயில்

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் கடந்த மார்ச், ஏப்ரல் மாதங்களில் வெயில் சுட்டெரித்தது. 100 டிகிரியை தாண்டி தினமும் அடித்த வெயிலால் மக்கள் மிகவும் அவதிக்குள்ளானார்கள்.

அதிகபட்சமாக 108 டிகிரி வரையில் வெயில் கொளுத்தியது. இதனால் இரவு நேரங்களில் அனல் காற்று வீசியது.

திடீர் மழை

இந்த நிலையில் நேற்று முன்தினம் இரவு கிருஷ்ணகிரி, ஓசூர், சூளகிரி, தேன்கன்கனிக்கோட்டை, போச்சம்பள்ளி, ஊத்தங்கரை, அஞ்செட்டி, தளி உள்ளிட்ட கிருஷ்ணகிரி மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் திடீரென இடி - மின்னலுடன் மழை பெய்தது. இதனால் பல இடங்களில் மின்சாரம் துண்டிக்கப்பட்டது.

கிருஷ்ணகிரியில் பலத்த மழை காரணமாக தாழ்வான பகுதிகளில் தண்ணீர் தேங்கியது. நீண்ட நாட்களுக்கு பிறகு கிருஷ்ணகிரியில் மழை பெய்ததால் மக்கள் மகிழ்ச்சி அடைந்தனர். இரவில் குளிர்ந்த காற்று வீசியது.

மழை அளவு

நேற்று காலை 8 மணி நிலவரப்படி மாவட்டத்தில் பெய்த மழை அளவு மில்லிமீட்டரில் வருமாறு:-

கிருஷ்ணகிரி - 58

சூளகிரி - 52

தளி - 10

தேன்கனிக்கோட்டை- 7

ஓசூர் - 5

ராயக்கோட்டை - 5

ஊத்தங்கரை - 2.

## 45 நாள் தடை காலத்தையொட்டி சீலா மீன்களின் விலை கிடுகிடு உயர்வு



ராமேசுவரம்,

45 நாள் தடை காலத்தையொட்டி நாட்டுப்படகு மீனவர்கள் பிடித்து வரும் சீலா மீன்களின் விலை கிடுகிடுவென உயர்ந்துள்ளது.

விசைப்படகுகள்

ராமேசுவரம் உள்ளிட்ட மாவட்டம் முழுவதும் மீன்கள் இனப்பெருக்க காலத்தையொட்டி 45 நாட்கள் மீன்பிடிக்க விசைப்படகுகளுக்கு தடைவிதிக்கப்பட்டுள்ளது. இதையடுத்து ராமேசுவரம், பாம்பன் ஆகிய பகுதியை சேர்ந்த மீனவர்கள் நாட்டுப் படகு களில் மட்டும் மீன் பிடிக்க சென்று வருகின்றனர். 45 நாள் தடைகாலத்தில் மீன்பிடிக்க செல்லும் நாட்டுப்படகு மீனவர்களுக்கு அதிகஅளவில் மீன்கள் கிடைக்கும். ஆனால் இந்த ஆண்டு தடைகாலத்தில் நாட்டுப்படகு மீனவர்களுக்கு மீன்கள் குறைவாகவே கிடைப்பதால் மிகுந்த ஏமாற்றம் அடைந்துஉள்ளனர்.

மேலும் மீன்கள் வரத்தும் குறைவாகவே உள்ளதால் தற்போது நாட்டுப் படகு மீனவர்கள் பிடித்து வரும் சீலா, மாவுலா, பாறை, கட்டா, நண்டுகணவாய் உள்ளிட்ட அனைத்து வகை மீன்களின் விலையும் உயர்ந்து இந்த வகை மீன்களுக்கு கிராக்கிஏற்பட்டுஉள்ளது. நேற்று மீன் பிடித்து கரை திரும்பிய பாம்பனை சேர்ந்த ஒரு நாட்டுப் படகில் 15 கிலோ எடை கொண்ட பெரிய சீலா மீனும் பாறை, கட்டா உள்ளிட்ட சில மீன்களும் சிக்கியிருந்தன. இந்த சீலா மீன்கள் சென்னையில் உள்ள கம்பெனி மூலம் வெளிநாட்டிற்கு அனுப்பப்படுகின்றன. மற்ற மீன்கள் தமிழகத்தில் உள்ள மற்ற ஊர்களுக்கு அனுப்பி வைக்கப் பட்டன.

இதுபற்றி பாம்பன் நாட்டுப்படகு மீனவர் ஒருவர் கூறியதாவது:– ஆண்டுதோறும் விசைப்படகுகள் மீன் பிடிக்க செல்லாத 45 நாள் தடை காலத்தில் நாட்டுப் படகுகள் ஒவ்வொரு படகிலும் விலை உயர்ந்த சீலா மீன்கள் சுமார் 100 கிலோவில் இருந்து 200 கிலோ வரை கிடைக்கும். ஆனால் இந்த ஆண்டு ஒவ்வொரு நாட்டுப்படகிலும் சீலா மீன்கள் 20 முதல் 30 கிலோ வரை

மட்டுமே பிடிபட்டு உள்ளது. மற்ற மீன்களும் குறைவாகவே தான் கிடைத்துள்ளன. இதனால் நாட்டுப் படகு மீனவர்கள் மிகுந்த ஏமாற்றம் அடைந்துள்ளோம். இவ்வாறு அவர் கூறினார்.

விலை உயர்வு

தடைகாலத்தையொட்டி விசைப் படகுகள் மீன் பிடிக்க செல்லாததால் நாட்டுப்படகு மீனவர்கள் பிடித்து வரும் சீலா மீனின் விலை ஒரு கிலோ ரூ.350–ல் இருந்து கிடுகிடுவென உயர்ந்து ரூ.600–க்கு விற்பனை செய்யப்படுகிறது. மீன்களிலேயே மிக அதிக ருசியான முள் இல்லாத மீன் என்றால் அது சீலா மீன் தான். ஆனால் சீலா மீனின் விலை ஒரு கிலோ 600 ரூபாய்க்கு உயர்ந்துள்ளதால் சீலா மீனை விரும்பி சாப்பிடும் மீன் பிரியர்கள் வருத்தம் அடைந்துள்ளனர்.

## தேனி மாவட்டத்தில் மாம்பழ சீசன் தொடங்கியது



தேனி,

தேனி மாவட்டத்தில் மாம்பழ சீசன் தொடங்கி உள்ளது. இங்கு இருந்து உள்ளூர் சந்தைகளுக்கும், வெளியூர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டு வருகின்றன.

மாம்பழ சீசன்

தேனி மாவட்டத்தில், பெரியகுளம், தேனி, அல்லிநகரம், போடி, ஆண்டிப்பட்டி போன்ற இடங்களில் மா விவசாயம் அதிக அளவில்

நடக்கிறது. கல்லாமை, காசா, சப்போட்டா, செந்தூரம் போன்ற பல்வேறு ரக மாங்காய் சாகுபடி செய்யப்பட்டு வருகின்றன. இங்கு விளைச்சல் அடையும் மாங்காய் மற்றும் மாம்பழங்கள் தேனி மாவட்டத்தில் உள்ள சந்தைகளுக்கும், தமிழகத்தின் பல்வேறு பகுதிகளுக்கும் விற்பனைக்காக அனுப்பி வைக்கப்பட்டு வருகின்றன. கேரளா, ஆந்திரா, கர்நாடகா போன்ற வெளி மாநிலங்களுக்கும் இங்கு இருந்து மாம்பழம் அனுப்பி வைக்கப்படுகிறது.

ஏப்ரல் மாத கடைசியில் அல்லது மே மாத தொடக்கத்தில் மாம்பழ சீசன் தொடங்குவது வழக்கம். அதன்படி தற்போது மாம்பழ சீசன் தொடங்கி உள்ளது. விளைச்சல் அடைந்த மாம்பழங்கள் தேனி, போடி பகுதிகளில் உள்ள மா விற்பனை மண்டிகளில் குவிக்கப்பட்டு உள்ளன. சாலையோரமும் குவித்து வைத்து மாம்பழங்கள் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

<u>வரத்து அதிகரிப்பு</u>

தேனி, பெரியகுளம், ஆண்டிப்பட்டி, உத்தமபாளையம், கம்பம், சின்னமனூர், போடி பகுதிகளில் உள்ள மார்க்கெட்டுகளிலும் அதிக அளவில் மாம்பழங்கள் விற்பனைக்காக கொண்டு வரப்பட்டுள்ளன. விளைச்சல் அதிகரிப்பு காரணமாக வரத்து அதிகமாக காணப்படுகிறது. விவசாயிகளிடம் இருந்து வியாபாரிகள் வாங்கிச் சென்று மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனை செய்து வருகின்றனர்.

தற்போது 1 கிலோ கல்லாமை ரூ.–க்கும், காசா ரூ.–க்கும், சப்போட்டா ரகம் ரூ.–க்கும், செந்தூரம் ரூ.–க்கும் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. இன்னும் சில நாட்களில் வரத்து அதிகரித்து விலை குறையும் வாய்ப்பு உள்ளதாக வியாபாரிகள் தெரிவித்தனர்.

## விருதுநகர் மார்க்கெட் நிலவரம்: பாமாயில், பாசிபருப்பு விலை குறைந்தது கடலை எண்ணெய் விலை உயர்வு

விருதுநகர்,

விருதுநகர் மார்க்கெட்டில் பாமாயில், பாசிபருப்பு ஆகியவற்றின் விலை குறைந்துள்ள நிலையில் கடலை எண்ணெய் விலை உயர்ந்துள்ளது.

<u>உளுந்து</u>

விருதுநகர் மார்க்கெட்டில் உளுந்து 100 கிலோ மூடைக்கு ரூ.1500 விலை உயர்ந்து ரூ.9,100 முதல் ரூ.11,100 வரையிலும், உருட்டு உளுந்தம்

பருப்பு ரூ.12700 முதல் ரூ.13100 வரையிலும், தொலி உளுந்தம் பருப்பு ரூ.9,100 முதல் ரூ.12,200 வரையிலும் விற்பனை ஆனது. துவரை 100 கிலோ மூடைக்கு ரூ.500 விலை குறைந்து ரூ.8,800 முதல் ரூ.9,800 வரையிலும், துவரம் பருப்பு ரூ.13,100 முதல் ரூ.14,300 வரையிலும் விற்பனை ஆனது. பாசிப்பயறு 100 கிலோ மூடைக்கு ரூ.500 விலை குறைந்து ரூ.7,300 முதல் ரூ.7,800 வரையிலும், பாசிபருப்பு 100 கிலோ மூடைக்கு ரூ.7,900 முதல் ரூ.8,600 வரையிலும் விற்பனை செய்யப்பட்டது.

மல்லி லயன் ரகம் 40 கிலோ மூடைக்கு ரூ.3,500 முதல் ரூ.4,000 வரை விற்பனை ஆனது. வத்தல் (குவிண்டாலுக்கு) சம்பா ரகம் ரூ.10,000 முதல் ரூ.11,000 வரையிலும், ஏ.சி. வத்தல் ரூ.10,500 முதல் ரூ.12,000 வரையிலும், முண்டு வத்தல் குவிண்டாலுக்கு ரூ.8,500 முதல் ரூ.9,500 வரையிலும் விலை சொல்லப்பட்டது.

<u>கடலை எண்ணெய்</u>

விருதுநகர் எண்ணெய் மார்க்கெட்டில் கடலை எண்ணெய் 15 கிலோவுக்கு ரூ.50 விலை உயர்ந்து ரூ.2,000 ஆகவும், தேங்காய் எண்ணெய் ரூ.1,605 ஆகவும், சூரியகாந்தி எண்ணெய் ரூ.1,350 ஆகவும் விற்பனை ஆனது. நிலக்கடலை பருப்பு 80 கிலோ மூடைக்கு ரூ.100 விலை உயர்ந்து ரூ.6,000 ஆகவும், கடலை புண்ணாக்கு 100 கிலோ மூடைக்கு ரூ.300 விலை உயர்ந்து ரூ.4,700 ஆகவும், எள் புண்ணாக்கு 65 கிலோ ரூ.2,210 ஆகவும் விற்பனை ஆனது.

பாமாயில் 15 கிலோவுக்கு ரூ.35 விலை குறைந்து ரூ.1040 ஆகவும், நல்லெண்ணெய் 15 கிலோ ரூ.2,890 ஆகவும் விற்பனை செய்யப்பட்டது.

<u>சீனி</u>

விருதுநகர் சீனி மார்க்கெட்டில் சீனி குவிண்டாலுக்கு ரூ.3,940 ஆகவும், கொண்டைக் கடலை குவிண்டாலுக்கு ரூ.6,000 ஆகவும், பொரிகடலை 55 கிலோவுக்கு ரூ.4,210 ஆகவும், பட்டாணி 100 கிலோ ரூ.2,850 ஆகவும், பட்டாணி பருப்பு ரூ.3,100 முதல் ரூ.3,650 வரையிலும், மசூர் பருப்பு ரூ.8,200 முதல் ரூ.8,300 வரையிலும், ரவை 90 கிலோவுக்கு ரூ.3,215 ஆகவும், மைதா முதல் ரகம் 90 கிலோ ரூ.3,025 ஆகவும், 2–வது

ரகம் 2195 ஆகவும் விற்பனை செய்யப்பட்டது. ஆட்டா 50 கிலோ ரூ.1085 ஆகவும் விற்பனை ஆனது.

விருதுநகர் காபி மார்க்கெட்டில் காபி பிளாண்டேசன் பிபி ரகம் 50 கிலோ ரூ.9,750 ஆகவும், ஏ ரகம் ரூ.12,750 ஆகவும், சி ரகம் ரூ.8,000 ஆகவும், ரோபஸ்டா பிபி ரகம் ரூ.6,300 ஆகவும், பிளாக் பிரவுன் ரகம் ரூ.5,800 ஆகவும் விற்பனை ஆனது.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**கர்ப்பப்பையை பலப்படுத்தும் பாதாம்**




பெண்களுக்கு கர்ப்பப்பையில் ஏற்படும் கட்டிகள், ஹார்மோன் பிரச்னை ஆகியவை குழந்தை பேறுக்கு தடையாக உள்ளது. கழற்சி காயை பயன்படுத்தி மலட்டுத்தன்மையை போக்கும் மருந்து தயாரிக்கலாம். தேவையான பொருட்கள்: கழற்சிக்காய், மிளகுப்பொடி, தேன்.கழற்சிக்காயை வெயிலில் காயவைத்து உள்ளே இருக்கும் பருப்பை பொடி செய்து எடுக்கவும். 4 பங்கு கழற்சி காய் பொடி, ஒரு பங்கு மிளகுப் பொடி ஆகியவற்றை நன்றாக கலக்கவும்.

இந்த கலவையில் இருந்து தினமும் காலை, மாலை அரை ஸ்பூன் அளவுக்கு எடுத்து தேன் அல்லது மோரில் கலந்து சாப்பிட்டு வர நீர்கட்டிகள் சரியாகும். பெண் மலட்டுத்தன்மைக்கு நீர்கட்டிகள் கருப்பையில் தேங்கியிருப்பதும் ஒரு காரணமாக அமைகிறது. நாட்டு கடைகளில் கிடைக்கும் கழற்சி காய் குழந்தைபேறுக்கு மருந்தாகிறது.

தண்ணீர் விட்டான் கிழங்கை பயன்படுத்தி பெண்களுக்கு ஏற்படும் ஹார்மோன் குறைபாட்டை சரிசெய்யும் மருந்து தயாரிக்கலாம். தேவையான பொருட்கள்: தண்ணீர் விட்டான் கிழங்கு, பனங்கற்கண்டு, பால்.அரை ஸ்பூன் தண்ணீர் விட்டான் கிழங்கு பொடியுடன் சிறிது பனங்கற்கண்டு சேர்த்து காய்ச்சவும்.

வடிகட்டியபின் காய்ச்சிய பால் சேர்க்கவும். இதை பெண்கள் குடித்துவர கர்ப்பப்பை, சினைப்பை பலப்படும். ஹார்மோன் குறைபாடு சரியாகும். தண்ணீர் விட்டான் கிழங்கு நாட்டு மருந்து கடைகளில் கிடைக்கும். பாதாம் பருப்பை பயன்படுத்தி ஹார்மோன் குறைபாட்டை சரிசெய்யும் மருந்து தயாரிக்கலாம். தேவையான பொருட்கள்: பாதாம், பூசணி விதை, நாட்டு சர்க்கரை, பால். பாதாம் பருப்பு மற்றும் பூசணி விதைகளை வறுத்து பொடி செய்து எடுக்கவும்.

இந்த கலவை ஒரு ஸ்பூன், சிறிது நாட்டு சர்க்கரை, காய்ச்சிய பால் சேர்த்து கலக்கவும். இதை குடித்துவர கர்ப்பப்பை, சினப்பை பலப்படும். ஹார்மோன் குறைபாடு சரியாகும். அமுக்கரா கிழங்கை பயன்படுத்தி ஹார்மோன் குறைபாட்டை சரிசெய்யும் மருந்து தயாரிக்கலாம்.

தேவையான பொருட்கள்: அமுக்கரா கிழங்கு, பனங்கற்கண்டு, பால். ஒரு ஸ்பூன் அமுக்கரா கிழங்கு பொடியுடன் சிறிது பனங்கற்கண்டு அல்லது நாட்டு சர்க்கரை சேர்த்து நீர்விட்டு கொதிக்க வைக்கவும். இதை வடிகட்டி காய்ச்சிய பால் சேர்த்து இரவு தூங்க போகும் முன்பு எடுத்து கொண்டால் ஹார்மோன் குறைபாடு, மலட்டு தன்மை சரியாகும். அமுக்கரா கிழங்கு பொடி நாட்டு மருந்து கடைகளில் கிடைக்கும்.

## உடல் எடையை குறைக்கும் முட்டைகோஸ்



மகப்பேறுக்கு பின் பெண்களின் உடல் எடை அதிகரித்து விடுகிறது. முட்டைகோஸை பயன்படுத்தி உடல் எடையை குறைக்கும் மருந்து தயாரிக்கலாம்.

தேவையான பொருட்கள்: முட்டைகோஸ், நல்லெண்ணெய், உப்பு, மிளகுப் பொடி.ஒரு பாத்திரத்தில் ஒரு ஸ்பூன் நல்லெண்ணெய் ஊற்றவும். எண்ணெய் காய்ந்தவுடன் ஒருபிடி முட்டைகோஸ் போடவும். உப்பு சேர்த்து நன்றாக வதக்கவும். இதனுடன் சிறிது மிளகுப் பொடி சேர்க்கவும். குழந்தை பெற்றவர்கள் இதை சாப்பிடும்போது உடல் எடை கூடாமல் இருக்கும். வாரம் இருமுறை எடுத்து கொண்டால் உடல் பருமன் குறையும். காலை உணவுடன் இதை சாப்பிடலாம்.

பல்வேறு நன்மைகளை கொண்ட முட்டைகோஸ் கொழுப்பு சத்தை கரைத்து வெளித்தள்ளும் மருந்தாகிறது. ரத்த அழுத்தத்தை குறைக்கும். லவங்கப்பட்டையை பயன்படுத்தி உடல் பருமனுக்கான மருந்து தயாரிக்கலாம். தேவையான பொருட்கள்: லவங்கப்பட்டை, தேன். அரை ஸ்பூன் லவங்கப்பட்டை பொடியுடன் தேன் சேர்த்து நன்றாக கலக்கவும். இதை தினமும் காலை வேளையில் சாப்பிட்டுவர உடல் எடை குறையும். கொழுப்புச் சத்து குறையும். வெள்ளைப்போக்கு பிரச்னைக்கு தீர்வாகிறது.

தக்காளியை பயன்படுத்தி உடல் எடையை குறைக்கும் மருந்து தயாரிக்கலாம். தேவையான பொருட்கள்: தக்காளி, தயிர், உப்பு, மிளகுப் பொடி.50 கிராம் அளவுக்கு தக்காளி துண்டுகளை எடுத்து புளிப்பில்லாத தயிரில் நனைத்து எடுக்கவும். இதனுடன் சிறிது உப்பு, மிளகுப் பொடி சேர்த்து சாப்பிடுவர உடல் எடை கூடாது. காலை உணவுடன் எடுத்துக் கொள்ளலாம். இட்லி, தோசை எண்ணிக்கையை குறைத்து கொண்டு இதை சாப்பிடலாம்.

தக்காளியில் வைட்டமின் சி உள்ளது. நோய் எதிர்ப்புசக்தி கொண்டது. தக்காளியை அதிகமாக சேர்த்து கொண்டால் சளி பிடித்துவிடும் என்பது தவறு. தக்காளி புற்றுநோய் வராமல் தடுக்கிறது. உடல் எடை கூடுவதற்கு காரணமான கொழுப்பு சத்து, நீர்சத்தை வெளியேற்றுகிறது. தக்காளி உடல் எடையை குறைக்கும் உணவாகிறது.

பிரசவத்துக்கு பின்னர் வயிற்றில் ஏற்படும் தோல் சுருக்கத்துக்கான மேல் பூச்சு மருந்து தயாரிக்கலாம். தேவையான பொருட்கள்: விளக்கெண்ணெய், பூண்டு, பாதாம். 50 மில்லி அளவுக்கு விளக்கெண்ணெயில் 5 பல் பூண்டு தட்டி போடவும். இதனுடன் பாதாம் பருப்பு பொடியை சேர்க்கவும். நன்றாக வேகவைத்து தைலமாக காய்ச்சவும். இதை ஆற வைத்து வடிகட்டி, மேல் பூச்சாக பூசிவர வயிற்றில் ஏற்படும் தோல் சுருக்கம் சரியாகும்.